லத்திலே நகரத்திலே நுழைகிற போது ஆண்டுதோறும் பொருட் காட்சி நடத்துகின்ற அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்திருப்ப தாக நான் அறிகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, குற்றா லத்திற்கு சீஸன் காலங்களில் ஏழை எளிய மக்கள் அதிகமாக வருகி றார்கள். கூட்டம் அதிகமாக வரக்கூடிய நேரங்களில் தனியார் லாட்ஜ்களில் அங்கே வருகிற கூட்டத்தைப் பார்த்து அதிக அள வில் வாடகை கூடுதலாக கேட்கிறார்கள். அவர்கள் இவ்வளவு தான் வாடகை வாங்க வேண்டுமென்று அரசாங்கமே நிர்ணயித்து ஒரு சுற்றறிக்கை அனுப்புவார்களா? கூடுதலாக வாடகை கேட்கும் லாட்ஜுகளை அரசாங்கமே எடுத்து நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகை நிர்ணயிக்கிற அதிகாரம் சுற்று லாத் துறையிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக கேள்வி போட்டால் சம்பந்தப்பட்ட துறையினர் அதற்கு பதில் அளிப்பார்கள். ஆனால் சீசன் நேரத்தில் இப்படி இட நெருக் கடி ஏற்படுகிறது என்பதை மனதில் வைத்து, குறைந்த வருமானக் காரர்கள் தங்குவதற்கு இன்னும் அதிக அளவில் வசதியை ஏற் படுத்துவதற்கு கட்டிடங்களாகவே விலைக்கு கிடைக்குமானால் அவற்றையும் வாங்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்திருக் கிறது.

பவானி அருகே காவிரி ஆறும், பவானி ஆறும் கூடுகின்ற இடமான கூடு துறையை அழகு படுத்தும் திட்டம்.

*வினா எண். 313—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டத்தில் பவானி அருகே காவிரி நதியும், பவானி நதியும் கலக்குமிடமான 'கூடுதுறையினை' சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அழகுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆம். பெரியார் மாவட்டத்தில் பவானி ஆறும் காவிரி ஆறும் கூடுகின்ற இடமான கூடுதுறையை முதற்கட்டமாக மாவட்ட சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனை யில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எத்தனை லட்சம் பொருள் செலவில் இந்தத் திட்டத்தை அரசு நிறைவேற்ற இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

1983 மார்ச் 8]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடம் பொதுவாகவே தமிழகத்தில், அதிலும் குறிப்பாக கோவை, பெரியார், சேலம் மாவட்டப் பகுதிகளில் மிகச் சிறந்த இடமாக போற்றப்பட்டு வருகிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் பல விழாக்களை ஒட்டி அந்த இடத்தில் கூடுகிறார்கள். சுற்றுலா தலமாக ஆக்க வேண்டும், யாத்திரை தலமாக ஆக்கவேண்டும் என்று வேண்டுகோள்கள் வந்ததையொட்டி மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்கள் பரிசீலனை செய்து ரூ. 35 லட்சம் செலவில் பல பணிகளை நிறைவேற்ற வேண்டுமென்று அரசிற்கு அறிக்கை தந்திருக்கிறார்கள். பல்வேறு துறைகளின் மூலமாக இப்பணிகளை நிறைவேற்றுவதற்கு திட்டங்கள் இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

திரு. பி. ஜி. நாராயணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி கூடுதுறையினை அழகுபடுத்தும் திட்டத்தில் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன ? இந்தத் திட்டம் நீண்ட காலமாக நிலுவையில் இருக்கிறது என்பதை உத்தேசித்தாவது இந்த ஆண்டே பணிகள் துவங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 11 அல்லது 12 இனங்களில் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் படிப்பது என்றால் நேரம் அதிகமாகும். இருந்தாலும் இந்த ஆண்டிலேயே நம்முடைய போக்குவரத்துத் துறை ரூ. 3 இலட்சம் செலவிலும், பொதுப்பணித்துறை சுமார் 10 இலட்சம் ரூபாய் செலவிலும், இந்து சமய அறநிலையத் துறை 2 இலட்சம் ரூபாய் செலவிலும், மற்றும் பவானி நகரசபை, சுற்றுலாத் துறை என்று இந்த ஆண்டிலே அவரவர்கள் சில வேலைகளைப் பிரித்துக்கொண்டு செய்ய வேண்டுமென்று இந்த குழுவினர் கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கான ஆணைகள் பிறப்பிப்பதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது.

இராமேசுவரத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம்

*வினா எண். 314—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல கோடி ரூபாய் செலவில் இராமேசுவரத்தை அபிவிருத்தி செய்யும் தமிழக அரசின் பெரிய திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதா ?

(ஆ) தமிழக அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?